பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
25 08 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் சுயசார்பை வலுப்படுத்த இளைஞர்கள் சுதேசி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. 2047ஆம் ஆண்டுக்குள் விளையாட்டுத் துறையில் உலகின் 5 முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. உடல் உறுப்பு முறைகேட்டில் ஈடுபட்ட மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்கு வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. தென்பெண்ணை ஆறு மாசுபடுவதைத் தடுக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5. கேமரூன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhruv Rawat - Suraj Goala இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

நாட்டின் சுயசார்பை வலுப்படுத்த இளைஞர்கள் சுதேசி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அகமதாபாதில் Sardardham திட்டத்தின் இரண்டாம் கட்டமாக மகளிர் விடுதி கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், மக்கள் அனைவரும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அகமதாபாதில் கட்டப்படும் புதிய விடுதி, இளம் பெண்களுக்கு அதிகாரம் அளித்து அவர்களை சுயசார்பு அடையச் செய்வதோடு தேச நிர்மாணப் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இதேபோன்ற விடுதிகள் வதோதரா, சூரத், ராஜ்கோட் மற்றும் மெஹ்சானா ஆகிய இடங்களிலும் கட்டப்படும் என்று அவர் தெரிவித்தார்.

குஜராத்தில் தாம் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், பெண் சிசுக் கொலைக்கு எதிராகவும் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறினார்.

இளையோருக்கு திறன் பயிற்சி அளித்து அதிகாரம் அளிக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முத்ரா திட்டம் மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவற்றின் வாயிலாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், தொழில்முனைவோராக மாற்றவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

**<<<<>>>>**

2047ஆம் ஆண்டுக்குள் விளையாட்டுத் துறையில் உலகின் 5 முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

அகமதாபாதில் காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியின் தொடக்க விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்கள் வாயிலாக விளையாட்டுத் துறை தற்போது முன்னணியில் உள்ளதாக தெரிவித்தார்.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள தேசிய விளையாட்டு நிர்வாக சட்டத்தில், விளையாட்டு கூட்டமைப்புகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**<<<<>>>>**

நாட்டில் தற்போது கலாச்சார மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் கலாச்சாரத்தையும், கலாச்சார நன்மதிப்புகளையும் பாதுகாக்க மக்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு தனி நபர்களின் முன்னேற்றம் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

திறன் பயிற்சியின் மூலமே நாட்டை வளமானதாக உருவாக்க முடியும் என்றும் திரு. ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

ஜனநாயக முறையில் தேர்தல் நடத்துவதில் பண்டைக் காலத்தில் இருந்தே தமிழகம் சிறந்து விளங்குவதாக சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் அனைத்து மாநில சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் பேசிய அவர், சோழர்கள் ஆட்சி செய்த 10ஆம் நூற்றாண்டு காலத்தில் குடவோலை முறை மூலம் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே அப்போதைய சென்னை மாகாணத்தில்தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் திரு. பிச்சாண்டி குறிப்பிட்டார்.

<<<<>>>>

உடல் உறுப்பு முறைகேட்டில் ஈடுபட்ட மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்கு வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாட்டு மக்களுக்கு உணவு வழங்கும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக கூறினார்.

இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிக அளவில் பயிர்க் காப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் நான்கு ஆண்டுகால திமுக ஆட்சியில் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தென்பெண்ணை ஆறு மாசுபடுவதைத் தடுக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவு நீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால், அந்த ஆறு மாசுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

திமுக அரசின் அலட்சியத்தால் தமிழகத்தில் உள்ள ஆறுகளும், ஏரிகளும் கழிவுநீர்க் கால்வாய்களாக மாறியிருப்பது வேதனை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்கால தலைமுறைக்கு தேவையான குடிநீரைப் பாதுகாக்க தென்பெண்ணை முதல் தாமிரபரணி வரையிலான ஆறுகளை சீரமைக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில் விநாயகர் சிலை விற்பனை சூடுபிடித்துள்ளது.

திருப்பத்தூரில் கிழங்கு மாவுகளைப் பயன்படுத்தி புதிய வடிவங்களில் தயாரிக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் விற்பனை அதிகரித்துள்ளதாக சிலை விற்பனையாளர் இளவரசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

*(Voice Byte - Ilavarasan - 30 Sec)*

இந்த சிலைகள் எழில்மிகு வண்ணங்களில் குறைந்த விலையில் கிடைப்பதால் இவற்றை ஆர்வமுடன் வாங்கிச் செல்வதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

காஸா நகரை முழுமையாக கைப்பற்றும் வகையில் தாக்குதல் தீவிரப்படுத்தப்படும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தானில் இன்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி மூன்றாக பதிவானது.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி மற்றும் துர்கா பூஜையை ஒட்டி தெலங்கானாவில் அமைக்கப்படும் பண்டிகைகால பந்தல்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஒடிசா மாநிலத்தில் இணைய குற்றங்கள் மூலம் 7 கோடி ரூபாய் அளவிற்கு மோசடி செய்த இருவர் அம்மாநில குற்றப்பிரிவு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஈரோட்டில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி குமரன் மற்றும் ஈ.வி.கே. சம்பத் சிலைகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு அரசு மேல்நிலைப் பள்ளியில் 1991ஆம் ஆண்டு படிப்பை முடித்த மாணவர்கள் 32 ஆண்டுகளுக்குப் பின் ஒன்றுகூடி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் பகுதியில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே அரசுப் பேருந்தின் டயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் 20க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர்.

<<<<>>>>

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் ஆவணி மாத பூரம் நட்சத்திரைத்தை ஒட்டி தங்க ரதத்தில் எழுந்தருளிய அம்பாளை ஏராளமான பக்தர்கள் வழிபட்டனர்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

## விளையாட்டுச் செய்திகள்

கேமரூன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் Dhruv Rawat - Suraj Goala இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 21-14, 21-13 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Akira Hanada - Shun Saito இணையை வென்றது.

<<<<>>>>

Europe Smash இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhatacharjee வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

சென்னையில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான தடகள சாம்பியன் போட்டியின் ஹெப்டத்லான் பிரிவில் தமிழகத்தின் தீபிகா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<The End>>>>